CEMCA

# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

## CHAPTER 7 - COMMUNITY RADIOS OF DIFFERENT REGIONS IN INDIA

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# EXAMPLE FROM NORTH INDIA

## வட இந்தியாவில் வெற்றிகரமாக இயங்கும் சமுதாய வானொலிகள்

CHAPTER - 7

EPISODE - 32

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# வட இந்தியாவில் இயங்கும் *Alfaz-E-Mewat* சமுதாய வானொலி நிலையம்

- இந்த சமுதாய வானொலியின் அலை வரிசை எண் 107. 8 MHz
- இந்த சமுதாய வானொலி நிலையம் 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி துவங்கப்பட்டது
- தினமும் 13 மணிநேரம் ஒலிபரப்பு செய்யக்கூடிய இந்த சமுதாய வானொலி நிலையம் ஹரியானா மாநிலத்தில் நவ் (Nauh) மாவட்டத்தில் உள்ள 225 கிராமங்களிலே ஒலிபரப்பப்படுகிறது
- ஒலிபரப்பப்படும் மொழியானது இந்தி, உருது, *Mewati* போன்ற மொழிகளில் ஒலிபரப்பப்படுகிறது

# *Alfaz-e-Mewat* சமுதாய வானொலியில் ஒலிபரப்பப்படும் முக்கிய நிகழ்ச்சிகள்.

- ***Alfaz-e-Mewat*** சமுதாய வானொலி நிலையத்திலே ஒளிபரப்பப்படும் முக்கிய நிகழ்ச்சிகள்:

- வேளாண் பற்றிய தகவல்கள், கல்வி, உடல், நலம், சுகாதாரம், நீர் வளம்பாதுகாத்தல், பாலின சம உரிமை, பெண்களுக்கு அதிகாரமளித்தல், குழந்தை திருமணம், நாட்டுப்புற பாடல்கள், போன்றவை இந்த வானொலியில் முக்கிய நிகழ்ச்சிகளாக தொகுத்து வழங்கப்படுகின்றன.

# *Alfaz-e-Mewat* சமுதாய வானொலி

- இந்த சமுதாய வானொலி நிலையம் முன்னோடி வானொலி நிலையமாக திகழ்கிறது.

- சமுதாய வானொலி நிலையத்திலே ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் அனைத்தும் அங்கு பேச்சு வழக்கில் உள்ள உள்ளூர் மொழிகளிலேயே ஒலிபரப்பப்படுகிறது.

- இதனால்தான் அங்குள்ள மக்கள் நிகழ்ச்சிகளை எல்லாம் எளிமையாக புரிந்து கொள்ளவும் மேலும் அதைப் பற்றி விவாதமும் செய்கின்றனர்.

# *Alfaz-e-Mewat சமுதாய வானொலி*

- *அது மட்டுமல்லாமல் அரசியல் செய்திகள், வேளாண் பற்றிய தகவல்கள், தண்ணீர் சேகரித்தல், மக்கள் தொகை பெருக்கம் போன்ற நிகழ்ச்சிகளை, விவாதம் கலந்துரையாடல் இவைகள் மூலமாக சமுதாய வானொலி நிலையத்திலே ஒலிபரப்பு செய்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.*

- *சமுதாய வானொலி நிகழ்ச்சியில் கிராம மக்கள், பள்ளி குழந்தைகள், உள்ளூர் கலைஞர்கள் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதன் மூலமாக இவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்*

- *இந்த சமுதாய வானொலி நிலையத்தில் 12 உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆறு மாத கால பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்*

# *Alfaz-e-M ewat* சமுதாய வானொலி

- சமுதாய வானொலி நிலையத்திலே உபகரணங்களை இயக்குவது, நிகழ்ச்சியை தயாரித்து வழங்குவது இவற்றையெல்லாம் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது.

- அது மட்டுமல்லாமல்  நிலையத்தை நிர்வகிப்பது என்பதை பற்றியும் மற்றும் தொழில்நுட்ப பணிகளை பயன்படுத்தி ஒலிபரப்பு செய்ய இவர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது .

- சமுதாய வானொலி நிலையத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் சமுதாய வானொலி நிலையத்தை நிர்வகிக்கின்றனர். மேலும் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்குகின்றனர்.

# *Alfaz-e-Mewat* சமுதாய வானொலி

- இப்பெண்கள் பாலின சம உரிமை எனும் தலைப்பிலே நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிக் கொண்டு இருக்கும்போது வானொலி நிலையத்திற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட அலைபேசி அழைப்பு நேயர்கள்களிடமிருந்து வந்தது.
- அதிலும் முக்கியமாக அந்த அலைபேசி அழைப்பில் 20 சதவீதம் பெண்கள் ஆவார்கள்.
- சமுதாய வானொலி நிலையத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் இயற்கையின் பரிசுகளான : நிலம், நீர், காடுகளைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றியும், துய்மை, உடல் நலம், சுகாதாரம், நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவை முக்கிய நிகழ்ச்சிகளாகும்

# *Alfaz-e-Mewat* சமுதாய வானொலி

- *Alfaz-e-Mewat* இந்த சமுதாய வானொலி நிலையம் ஹரியானாவில் உள்ள அந்தப் பகுதி மக்களுக்கு பயனளிக்கும் வகையில் மீண்டும் மீண்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

- அதில் சில தகவல்கள் நீர் சேகரித்தல் உடல்நலம் கல்வி வேளாண்மை பற்றிய நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

- ஏனென்றால் இவைகள் தான் நமது நாட்டிற்கு அடிப்படைத் தேவைகளாகும்.

## *Alfaz-e-Mewat* சமுதாய வானொலி

- இந்த சமுதாய வானொலி நிலையம் தங்கள் நிகழ்ச்சிகளை மேலும் பல பல சமுதாய வானொலி நிலையங்களுக்கு கொடுத்து வருகிறது.

- *Ek Dunia Anek Awaaz* என்ற இந்த சமுதாய வானொலி நிலையம் நிலையான அங்கீகாரம் மற்றும் மந்தன் விருது பெற்றுள்ளது. இந்த விருது சிறந்த ஒலிபரப்பிற்காக வழங்கப்பட்டது.

# *Alfaz-e-Mewat* சமுதாய வானொலி

- *Alfaz-e-Mewat* என்ற இந்த சமுதாய வானொலி நிலையம் நிலையான அங்கீகாரம் மற்றும் மந்தன் விருது பெற்றுள்ளது.
- இந்த விருது சிறந்த ஒலிபரப்பிற்காக வழங்கப்பட்டது.